பள்ளிக் கல்வித்துறை
தலைமைச் செயலகம்,
சென்னை- 600 009

கடித (நிலை) எண்.215 /அ.தே/2022 நாள் 07-12-2022

அனுப்புநர்
திருமதி.காகர்லா உஷா,இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர்,
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை-6.

ஐயா,

பொருள்: அரசுத் தேர்வுகள் இயக்ககம் - 2022-2023ம் கல்வியாண்டு முதல் மேல்நிலை முதலாம் ஆண்டு தொழிற்கல்வி பாடப்பிரிவுகளில் மறுசீரமைப்பு செய்யப்பட்டமை - தேர்வெழுதி தோல்வியுற்ற தேர்வர்களுக்கு - பழைய பாடத்திட்டத்தில் தேர்வு எழுதிட அனுமதி அளித்து- ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண்.125, ப.க(ப.க.7(1)த்துறை, நாள் 15.07.2022
2. தங்களின் கடித ந.க.எண்.019807/எப்.1/2022, நாள் 27.09.2022

-------

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், மேல்நிலைக் கல்வியில் தொழிற்கல்வி பயிலும் மாணவர்களின் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் தொழிற்கல்வி பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை சீரமைக்க பரிந்துரை செய்ததின் அடிப்படையில், 2022-2023-ம் கல்வியாண்டு முதல் மேல்நிலை முதலாம் ஆண்டு தொழிற்கல்வி பாடப்பிரிவுகளில் இடம்பெற்றுள்ள கணினி தொழில்நுட்பம் (Computer Technology), கணினிப் பயன்பாடுகள் (Computer Applications) என்ற பாடநூல்களுக்கு மாற்றாக புதிதாக அறிமுகப்படுத்தப்படும் வேலை வாய்ப்புத் திறன்கள் (Employability skills) என்ற புதிய பாடநூல் ஆகியவற்றை 2022-2023-ஆம் கல்வியாண்டில் அச்சிட்டு வழங்க தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திற்கு அனுமதி அளித்தும், மேற்கண்டவாறு மறுசீரமைக்கப்பட்ட தொழிற்கல்வி பாடங்களை 2022-2023ஆம் கல்வியாண்டு முதல் பள்ளிகளில் நடைமுறைப்படுத்திடவும், ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. அதனைத் தொடர்ந்து, பார்வை இரண்டில் காணும் கடிதத்தில், மேற்காணும் அரசாணையின்படி தொழிற்கல்வி பாடப்பிரிவில் மறுசீரமைக்கப்பட்ட 8 பாடங்கள் மற்றும் கணினித் தொழில்நுட்பம் மற்றும் கணினிப் பயன்பாடுகள்

(Computer Technology / Computer Applications) என்ற பாடநூலுக்கு மாற்றாக தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ள வேலைவாய்ப்புத் திறன்கள் (Employability Skills) என்ற பாடம் ஆகியவற்றினை புதிய தொழிற்கல்வி பாடத்திட்டத்தின்படி மார்ச் 2025 முதல் தோல்வியுற்ற / வருகை புரியாத பாடங்களுக்கான தேர்வுகளை தனித்தேர்வர்கள் எழுத அனுமதித்தும், தொழிற்கல்வி பாடப்பிரிவுகளில் மறுசீரமைப்பு செய்யப்பட்ட பாடங்கள் மற்றும் புதிய பாடத்தின்படி மார்ச் 2023 பருவம் முதல் மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும், மார்ச் 2024 பருவம் முதல் மேல்நிலை இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கும் பொதுத் தேர்வுகளை நடத்திடவேண்டும் எனவும், பொதுவாக பாடத்திட்டம் மாறும்பொழுது பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதி தோல்வியடைந்த மாணவர்களுக்கு இருவாய்ப்புகள் வழங்கப்படும் என்பதால் மேல்நிலை இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுத இரு வாய்ப்புகள் மார்ச் 2024, ஜூன் 2024 வரை வழங்கப்பட வேண்டும் என்பதால், அதே மாணவர்கள் முதலாம் ஆண்டு பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுத ஜூன் 2024 வரை (மார்ச் 2023, ஜூன் 2023, மார்ச் 2024 மற்றும் ஜூன் 2024) கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு வாய்ப்பு வழங்கி, தேர்வு நடத்த அனுமதி வழங்குமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

| தேர்வு | முந்தை தொழிற்கல்வி பாடத்திட்டத்தில் இறுதியாக தேர்வர்கள் தேர்வெழுதிய பருவம் | புதிய மறுசீரமைக்கப்பட்ட தொழிற்கல்வி பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும் பருவம் | முந்தைய தொழிற்கல்வி பாடத்திட்டத்தின்படி தேர்வெழுத வழங்கப்படவுள்ள வாய்ப்புகள் |
|---|---|---|---|
| மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) | மார்ச் 2022 மற்றும் ஜூன் 2022 | மார்ச் 2023 | மார்ச் 2023, ஜூன் 2023 மார்ச் 2024 மற்றும் ஜூன் 2024 |
| மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) | மார்ச் 2023 மற்றும் ஜூன் 2023 | மார்ச் 2024 | மார்ச் 2024 மற்றும் ஜூன் 2024 |

3. மேற்காணும் நிலையில், அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கோரிக்கையினை ஏற்று, பார்வை ஒன்றில் காணும் அரசாணையின் அடிப்படையில், தொழிற்கல்வி பாடப்பிரிவில் மறுசீரமைக்கப்பட்ட 8 பாடங்கள், கணினி தொழில்நுட்பம் (Computer Technology) மற்றும் கணினிப் பயன்பாடுகள் (Computer Applications) என்ற பாடநூல்களுக்கு மாற்றாக மாற்றம் செய்யப்பட்டுள்ள வேலைவாய்ப்புத் திறன்கள் (Employability Skills) ஆகியவற்றில் மேல்நிலை

முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு தேர்வெழுதும் தனித்தேர்வர்கள், பழைய பாடத்திட்டத்தில் தோல்வியுற்ற / வருகை புரியாத பாடங்களுக்கான தேர்வுகளை எழுதும் தேர்வர்கள் மார்ச் 2025 பருவம் முதல் புதிய தொழிற்கல்வி பாடத்திட்டத்தின்படி மட்டுமே தேர்வு எழுதிட அனுமதியும் பழைய பாடத்திட்டத்தில் தோல்வியுற்ற மாணவர்களுக்கு மேலே பத்தி 4-ல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பருவங்களில் தேர்வுகளை எழுத அனுமதியும் அளித்து அரசு ஆணையிடுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

7.12.22

அரசு முதன்மைச் செயலாளருக்காக

7/12/22